
உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே
உயிர் நலம் பரவுகென் றுரைத்த மெய்ச்சிவமே

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தயவு




எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை வாழ்வு

வெளியீடு : அருட்ஜோதி வள்ளலார் சுத்த சமரச சன்மார்க்க சங்கம்
7, வண்ணாரத்தெரு, தெற்குமாசி வீதி, மதுரை–1.
போன் : (0452) 2344510
(தமிழ் நாடு சொசைட்டீஸ் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1975 இன்படி பதிவு எண் : 99 / 2004)

ஆசிரியர் : J.S. சாயி கணேஷ்



சத்திய ஞான சபை, வடலூர்.

தயவு

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை வாழ்வு

## பகுதி I – வாழ்க்கை

உலகம் தோன்றியது முதல் இன்று வரையிலும் பலப்பல ஞானியர் தோன்றி மக்கள் சமுதாயத்தை நல்வழிப் படுத்தி வந்துள்ளார்கள். அந்த வரிசையில் இன்று உலக மக்கள் அனைவரின் நலமும் கருதக்கூடியவர் சிதம்பரம் இராமலிங்கம் என்னும் வள்ளலார் ஆவார். இவர் சிதம்பரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள மருதூர் கிராமத்தில் 1823–ம் ஆண்டு அக்டோபர் 5ம் தேதி பிறந்தார். தந்தையார் பெயர் ராமய்யாபிள்ளை, தாயார் சின்னம்மை. இவர்களுக்கு இராமலிங்கம் ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். வள்ளலாருக்கு ஆறு மாதமான போது தந்தை காலமானார். இரண்டு மாதங்கள் பிறகு குடும்பத்துடன்

தாயாரின் சொந்த ஊரான பொன்னேரிக்கு அனைவரும் சென்று விட்டனர்.

வள்ளலார் குழந்தையாய் இருந்தபோது ஐந்து மாதத்தில் குடும்ப வழக்கத்தின் படி சிதம்பரம் கோயிலுக்கு அழைத்து செல்லப்பட்டார். கைக்குழந்தை வள்ளலார் சிதம்பர ரகசியத்தை தரிசித்து அதன் உண்மையை உணர்ந்ததும் கலகலவென சிரித்தார். சிறு குழந்தை இவ்வாறு சிரிப்பதைக் கண்ட தீக்ஷிதர் ( சிதம்பரம் கோயில் அர்ச்சகர் ) இந்தக்குழந்தை சாதாரணமானது அல்ல, தெய்வாம்சம் பொருந்தியது என்று கூறினார்.

பொன்னேரியிலிருந்து ஒரு வயதில் ( 1824 ) குடும்பம் சென்னைக்குக் குடி பெயர்ந்தது. அங்கு வள்ளலாரின் மூத்த சகோதரர் சபாபதிபிள்ளை புராண பிரசங்கங்கள் பல செய்து பிரபலமாகி வருவாய் ஈட்டி குடும்பத்தை நிர்வகித்தார்.

வள்ளலாரின் ஐந்து வயதில் சபாபதிபிள்ளை தாமே கல்வி புகட்டத் துவங்கினார். ஆனால் வள்ளலாருக்கு படிப்பில் ஆர்வம் செல்லவில்லை. பக்கத்தில் இருந்த கோயில்களுக்குச் சென்று அலைந்து கொண்டிருந்தார். தெருவில் யாரேனும் ஏதேனும் பேசிக்கொண்டிருந்தால் நின்று கேட்டுக் கொண்டிருப்பார். இதனைக்கண்டு வேதனையடைந்த தமையனார் வள்ளலாரை ஒரு நல்ல ஆசிரியரின் பொறுப்பில் விடத் தீர்மானித்தார். அதன்படி காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியாரிடம் தம்பியைக் கல்வி பயில விட்டார். அதுவும்

சரிப்படவில்லை. இதனால் கோபம் கொண்ட அண்ணன் தம்பிக்கு இனிமேல் உணவும், உடையும் ஏதும் தரக்கூடாது என்றும் வீட்டிற்குள் நுழையக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதித்தார். ஆனாலும் அண்ணியார் அண்ணனுக்குத் தெரியாமல் வீட்டிற்கு பின்பக்கம் வைத்து உணவு வழங்கி வந்தார். ஒரு நாள் அண்ணியார் தனக்காகவாவது படித்தால் என்ன என்று கேட்டுக் கொண்டதன் பேரில் வீட்டின் மாடியறையில் வள்ளலார் படிக்கத் துவங்கினார். இதற்கிடையில் சில வேளைகளில் உணவு கிடைக்காமல் தான் வருந்திய போது பசியினால் ஏற்படும் துன்பத்தை மிகவும் ஆழமாக உணர்ந்தார். பசி எனும் கொடும்பாவிப்பயலே என்றெல்லாம் பசியைப் பார்த்து திட்டியுள்ளார். எனவே தான் தன்னுடைய கொள்கையை விளக்கும் சத்திய ஞான சபை என்னும் ஆலயத்தை துவக்குவதற்கு முன்பே ( 1871) சத்திய தருமச்சாலை (1867) என்னும் உணவு வழங்கும் நிறுவனத்தை அமைத்தார்.

மேல்மாடி அறையில் தினமும் ஒரு கண்ணாடிக்கு முன் ஒரு தீபத்தை வைத்து அதன் பிம்பத்தை கண்ணாடியில் பார்த்து மனதை ஒரு முகப்படுத்தி தியானத்தில் அமர்வார். கண்ணாடிக்குள் தீபம் போல மனத்திற்குள் அருட்பெருஞ்ஜோதி விளங்குவதாக எண்ண வேண்டும் என்பதையே அவ்வாறு செய்து காட்டினார். இவ்வாறு வள்ளலார் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் திருத்தணிகை முருகனே தன் முன் கண்ணாடியில் காட்சி அளித்ததாக வள்ளலாரே குறிப்பிட்டுள்ளார். மேலும் தோற்றத்தில் சிறுவனாக காட்சியளித்துக் கொண்டிருந்தாலும் வள்ளலார்

சிறுபிராயத்திலேயே அறிவு மிகுந்தவராகவே காணப்பட்டார். மிகச்சிறிய வயதிலேயே அவர் உயர்ந்த கருத்துக்களை அடங்கிய பாடல்களை எழுதி விட்டார். அவருடைய ஒன்பதாவது வயதில் அவர் பாடிய பாடல் "தெய்வ மணிமாலை". இதிலுள்ள கருத்துக்கள் ஆழ்ந்த பொருட் செறிவை உடையது. இலக்கணப் பிழையற்றது. நல்ல அமைப்புடன் கூடிய இப்பாடல்களை பள்ளி சென்று பயிலாமலேயே இவரால் பாட முடிந்ததன் காரணம் இறைவன் தமக்கு அருளியது தான் என்று பல இடங்களில் உறுதிபகர்கின்றார். இதிலிருந்து நாம் கற்கும் படிப்பு மட்டுமல்ல இறைவனின் அருளும் நமக்கு அறிவு வளரத்தேவை என்பதை உணர்ந்து அதன்படி ஞானியர் கூறும் நல்வழியில் நடக்க முயல வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

வள்ளலாரின் அண்ணன் சபாபதிபிள்ளை நல்ல பேச்சாளர். பிரசங்கங்கள் செய்வதில் வல்லவர். ஒரு முறை அவர் சென்னை முத்தியாலுப் பேட்டையில் இருந்த செல்வந்தர், சோமு செட்டியார் வீட்டில் திருஞான சம்பந்தர் புராணத்தைப் பற்றிப் பேச வேண்டியிருந்தது. அன்று அவருக்கு கடும் காய்ச்சலாக இருந்ததால் தன்னுடைய இயலாமையைக் கூறுவதற்காக தம்பியை அனுப்பினார். அங்கே சென்ற போது கூட்டம் கூடியிருந்தது. சோமு செட்டியார் வள்ளலார் கூறியதைக் கேட்டு ஏமாற்றமடைந்தார். அங்கிருந்த சிலர்

வள்ளலாரையே பிரசங்கம் செய்யும் படிக் கேட்டுக் கொண்டனர். பெருமானும் சம்மதித்தார். அது அவர் பேசிய முதற்பேச்சு. பேசும் போது கையில் ஏடு, குறிப்பு எதுவுமில்லாமல் பேசத் துவங்கினார். சபையோர் இவர் பேச்சின் செறிவு, ஆழம் அறிவு முதலானவைக் கண்டு இனிமேல் அவரே தொடர்ந்து வரவேண்டும் என்று விரும்பிக் கேட்டனர். இதனைக் கேட்ட சபாபதிபிள்ளையும் தம்பியின் பெருமையை உணர்ந்து அவரை பல இடங்களுக்கு அனுப்பினார்.

தன்னுடைய பன்னிரண்டாம் வயதில் அவருக்கு பற்றற்ற நிலை கைக்கூடியது. உணவு, உண்ணக் கூடிய நிலையை வெறுத்தார், பொருளாசை, பணத்தாசை போன்ற எல்லா ஆசைகளையும் விட்டார். எனினும் அண்ணியாரின் வேண்டுகோளுக்கிணங்க உணவு உண்ணத் துவங்கினார். அவருடைய ஞான வாழ்வு இங்கிருந்து தான் ஆரம்பித்தது. தினமும் சென்னையை அடுத்த திருவொற்றியூர் சென்று அங்கு கோயில் கொண்டுள்ள தியாகராஜ பெருமானையும், இறைவி வடிவுடைய அம்மையையும் முருகப்பெருமானையும் வழிபடத் துவங்கினார். 12 வயதிலிருந்து 35 வயது வரை தொடர்ந்து இதனைக் கடைபிடித்தார். தான் எந்த ஆலயத்திற்கு சென்றாலும், எந்த தெய்வ வடிவத்தை வணங்கினாலும் அங்கங்கே உள்ள உருவத்தை மதியாது அதற்கு உள்ளீடாக விளங்கும் ஒரு தனிப்பொருளையே

கண்டதாகக் கூறுகின்றார். இதனைத் தான் அருட்பெருஞ்ஜோதி என்று வர்ணித்தார். கடவுளின் உண்மை என்றும் மாறாதது. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் அந்த உண்மையை நாம் சமய மத வர்ணம் பூசிச் சொல்லும் போது அதனை யாவரும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போகிறது. பொதுவான உண்மையை பொதுவான சொல்லால் எல்லோருக்கும் புரியும்படி சொல்லுவதற்கென்றே அவர் ஆறாயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றின் தொகுப்பு ஆறு திருமுறைகளாக பதிக்கப்பட்டு "திருஅருட்பா" என்று அழைக்கப்படுகிறது.

வள்ளலாருடைய வாழ்வில் பல அருட்செயல்கள் பல நேரங்களில் நிகழ்ந்துள்ளன. இந்த அற்புதச் செயல்களால் அவர் என்றைக்கும் ஆணவம் கொண்டது இல்லை. தம்மை பெரியவர் என்று அழைத்துக் கொண்டதில்லை. மிக மிக எளிமையான வாழ்க்கை முறையையே கைக் கொண்டிருந்தார்.

சென்னையிலிருந்து திருவொற்றியூர் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இதனை நடந்தே சென்றதால் அவர் மிகக் களைப்படைவார். மேலும் ஆலயத்திற்கு சென்ற பின் சந்நிதியில் திருவாசகம், தேவாரம் பாடல்களை மனமுருக அதிக நேரம் பாடிக் கொண்டிருப்பார். இரவு நேரமாகி விட்டால் பசியாலும், களைப்பாலும் மயங்கி கோயில் மண்டபத்திலேயே உறங்கி விடுவார்.

ஒரு நாள் ஒற்றியூரிலிருந்து சென்னை வர இரவு வெகு நேரமாகிவிட்டது. தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்ப மனமின்றி வள்ளலார் வெளித் திண்ணையிலேயே படுத்து விட்டார். சிறிது நேரத்தில் அண்ணியார் கையில் உணவுடன் வந்து எழுப்பினார். வள்ளலார் எழுந்து உண்டுவிட்டு உறங்கினார். பிறகு மீண்டும் எழுப்பப்பட்டார். விழித்தவரை அண்ணியார் உள்ளே வந்து உணவு உட்கொள்ளுமாறு அழைத்தார். தொடர்ந்தெழுந்த பேச்சில், அடிகளை முதலில் எழுப்பியது அண்ணியார் அல்ல. அண்ணியார் வடிவில் வந்த வடிவுடைஅம்மையே என்பதை அறிந்தனர். இதனை உறுதி சொல்வது போல வடிவுடை அம்மை கையில் உணவுடன் அவர்களுக்கு காட்சியளித்து மறைந்தனர்.

ஓர் இரவில் அடிகள் கோவில் மண்டபத்தில் பசியுடன் உறங்கிவிட கோயில் பூசகர் அவரை எழுப்பி உணவு தந்தார். பிறகு காலையில் தான் தெரிந்தது பூசகர் இரண்டு நாட்களாய் ஊரில் இல்லை என்பது.

திருவொற்றியூரில் வழிபட்ட பிறகு அங்குள்ள கடற்கரையில் உள்ள குளத்தில் இளைப்பாறுவார். ஒரு நாள் அங்கே வந்த பாட்டி ஒருவர் தனக்கு வள்ளலார் அற்புதம் ஒன்றை செய்து காட்ட வேண்டும் என்று விரும்பினார். பெருமானாரும் அதன்படி அங்கு இருந்த மணலை ஒரு பிடி அள்ளிக் கொடுக்க அவையனைத்தும் சிவ லிங்கங்களாக மாறியிருந்தது. இது போன்ற செயல்களால் வள்ளற்பெருமானின் புகழ் நாடெங்கும்

பரவியது. அவரைத்தேடி பலரும் வந்தனர். அவர்களுள் சிலர் அவருக்கு மாணவரானர். இந்த கால கட்டத்தில் அவருக்கு வயது 26.

வள்ளலார் ஒரு அருட்கவியாக விளங்கினார். மேலும் பல நூல்களை வெளிக் கொணர்ந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். இவரைச் சுற்றி எல்லா தரப்பு மக்களும் சூழ்ந்தனர். அவர்களுக்கு கல்வி புகட்டுவதில் வள்ளலார் ஆர்வம் செலுத்தினார். புகழ்ச்சிக்கு மயங்காது ஒரு ஞான வாழ்க்கையை நடத்தினார். தம்முடைய கருத்துக்களை தமிழில் உரைநடையாக எழுதி வெளியிட்டு புரட்சி செய்தார். ஏனெனில் அக்காலத்தில் கருத்துக்கள் எல்லாம் செய்யுள் வடிவிலேயே வெளியாக்கப்பட்டன. அதே போல பழம்பெரும் கல்வெட்டுக்களை ஆய்ந்து அதன் விளக்கங்களை வெளியிடும் ஆராய்ச்சியாளராகவும் இருந்தார். இதன் நடுவே தனக்குள்ளே ஊற்றெடுத்த ஆயிரமாயிரம் பாடல்களை எழுதியும் வந்தார். எழுதிய பாடல்களை அச்சுக்கு ஏற்றுவதில் வள்ளலார் கவனம் செலுத்தவில்லை. அவர் பின்னர் வடலூருக்கு வந்த பின்னர்தான் சீடர்களின் வற்புறுத்தலின் பேரில் பதிக்க சம்மதித்தார். அடிகள் சென்னையில் இருந்த காலத்தில் நகர்ப்புறத்தின் சீர்கேடுகளுக்கு அஞ்சி வெளியில் புறப்பட்டு இரவு தான் வீட்டுக்குச் செல்வார். ஒரு கட்டத்தில் தொல்லை மிகுந்த நகர வாழ்வைத் தவிர்க்க

அங்கிருந்து கிளம்பி யாத்திரையாக பாண்டிச்சேரி வரையில் வந்தார். அங்கிருந்து புறப்பட்டு வடலூர் திருத்தலத்திற்கு அருகிலுள்ள கருங்குழி கிராமத்தை அடைந்தார். அங்கிருந்த தமையனார் பரசுராமபிள்ளையின் மறைவிற்குப் பின் அங்கு மணியகாரராய் இருந்த வேங்கட ரெட்டியார் வேண்டுகையின் பேரில் அங்கேயே ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்தார். இந்த வீட்டில் ஒரு நாள் இரவில் திரு அருட் பெருஞ்ஜோதி அகவலை (1596 அடிகளில்) முழு மூச்சாக எழுதிக் கொண்டிருந்தார். வெளிச்சத்திற்காக அருகில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதற்கு அருகில் எண்ணெய்ப் பாத்திரம் இருந்தது. ஞாபகமறதியாக வேங்கட ரெட்டியாரின் மனைவியார் முத்தியாலு அம்மையார் அன்று எண்ணெய் வைக்க மறந்து வெளியூருக்கு சென்று விட்டிருந்தார். இரவு முழுவதும் ஒரே எண்ணத்தில் எழுதிக் கொண்டிருந்த வள்ளற்பெருமான் அருகில் இருந்த தண்ணீர் பாத்திரத்தை எண்ணெய் பாத்திரம் என்று நினைத்து இரவு முழுவதும் விளக்கில் விட்டுக் கொண்டிருந்தார், விளக்கும் விடாமல் எரிந்தது. இதிலிருந்து உண்மை அறம் கொண்டு வாழும் அருளாளர்களுக்கு இறைவன் எப்படி எல்லாம் தடைகளை நீக்குகின்றார் என்பதை சிந்தித்து பார்த்து அவர்கள் வழியில் நடக்க உறுதி பூண வேண்டும். 1874ம் ஆண்டு தன்னுடைய பூத உடலை தன்னுடைய 51—ம் வயதில் வள்ளலார் எவ்வாறு

மரணமின்றி மரணமில்லாமல் மறைத்துக் கொண்டார் என்பதை அடுத்த பகுதியில் விரிவாகக் காண்போம்.

## பகுதி II – கோட்பாடு

1865–ம் ஆண்டில் தமது 42ம் வயதில் அடிகள் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்ற நிறுவனத்தை அமைத்தார். தான் பெற்ற விஸ்வமான விசாலமான அறிவை மக்கள் அனைவருக்கும் தெரிவித்து அதனை அவர்களும் அடைந்திட இதனை நிறுவினார். சன்மார்க்கம் என்ற சொல்லுக்கு அழகிய விளக்கங்கள் உள்ளன. சைவ சமயத்தில் இறைவனை அடைய நான்கு வழிகன் உள்ளன.

அவையாவன :

| | | |
|---|---|---|
| தாச மார்க்கம் | – | இறைவனுக்கு அடிமையாதல் |
| சற்புத்திர மார்க்கம் | – | இறைவனுக்கு குழந்தையாதல் |
| சக மார்க்கம் | – | இறைவனுக்கு நண்பனாதல் |
| சன் மார்க்கம் | – | இறைவனே தானாதல் |

மேலும் விளக்கும் போது வள்ளலார் பின்வருமாறு கூறிகின்றார்.

| | | |
|---|---|---|
| தாச மார்க்கம் | – | எல்லா உயிர்களையும் தன்னுடைய அடிமையாக பாவித்தல். |
| சற்புத்திர மார்க்கம் | – | எல்லா உயிர்களையும் தன் குழந்தையாக பாவித்தல். |

சக மார்க்கம் – எல்லா உயிர்களையும் நண்பர்களாக பாவித்தல்.

சன் மார்க்கம் – எல்லா உயிர்களையும் தன்னைப் போல பாவித்தல் எனவே இது சமரச சன் மார்க்கம் எனவும் ஆகிறது.

சன் மார்க்கத்தின் குண இயல்புகளாக கொல்லாமை, புலால் தவிர்த்தல், பொறுமை, அமைதி, அடக்கம், சுயஒழுக்கம் மற்றும் ஆன்மாவின் இயற்கைக் குணமான ஜீவ காருண்யம் எனப்படும் உயிர் இரக்கம் என்கின்றார்.

கொல்லாமை மற்றும் உயிர் இரக்கத்தை அடிகள் மிகவும் உயர்வாகப் பேசுவதன் நோக்கம் : இதன் மூலமாக எவரும் நல் வாழ்வு எய்தி இறைவனை எளிதில் அடையலாம் என்பதே ஆகும். கொல்லாமை என்பதை ஒரு ஒழுக்க விதியாக மட்டும் கொள்ளாமல் அதனை ஒரு வழிபாட்டு முறையாக அறிவிக்கின்றார். இங்கே தான் வள்ளலார் ஒரு ஆன்மீக புரட்சியாளராக மிளிர்கின்றார். கொல்லாமை மற்றும் உயிர் இரக்கத்தை வலியுறுத்தும் போது அதனுள் அடங்கியுள்ள உலக அமைதி மற்றும் பேரின்ப வாழ்வு விளக்கம் பெறுகின்றது. கொல்லாமை இரு வேறு மனிதர்களுக்கு இடையில் உள்ள சாதி, மத, இன, சமூக, மொழி, குழு வேறுபாடுகளை கடந்து அனைவரும் சமம் எனும் கருத்து நிலைநிறுத்தப்பட உதவுகின்றது. உலகம் அமைதியாக வாழ தீவிரவாதம் ஒழிய வேண்டியுள்ளது. இதற்கு கொல்லாமைக்

கோட்பாடு வழிவகுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**சுத்த சன் மார்க்கத்தின் சிறப்பு :** இந்த மார்க்கம் உலகில் முன்பு பிறரால் காணப்பட்ட வகுத்து வழங்கப்பட்ட, பலவாகிய நெறிகளுள் எதனோடும் ஒப்பிடுவதற்கில்லாத, உயர் சிறப்பு ஆகிய அருள் ஒளியையே ஆதாரமாய்க் கொண்டு விளங்குகின்ற ஒன்றாகும்.

"இது அருளிலே தோன்றி, அருளிலே விளைந்து என்றென்றும் அருளிலே விளங்கிக் கொண்டிருக்கச் செய்யும் ஒன்றாகும்" என்று திண்டுக்கல் வாழ் சுத்த சன்மார்க்க ஞானியும் தயவுப் பெருநெறியை வகுத்துத் தந்தவருமான தயாநிதி சுவாமி சரவணானந்தர் குறிப்பிடுகின்றார்.

சுத்த சன் மார்க்கத்தை அடைவதற்கு சத்விசாரமும் பரோபகாரமும் தேவை. சத்விசாரம் என்பது யாதெனில் சத் + விசாரம், சத் – என்றும் உள்ளது. எங்கும் உள்ளது. அதாவது உண்மைப் பொருளாகிய கடவுள் சத்துப்பொருள் ஆகும். சிருட்டி என்பதே சத்துப் பொருளாம். விசாரம் – விசாரித்து அறிதல். அனைவரின் உள்ளே அருளணுவான ஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கும் ஆண்டவரை நம்முள் உள் முகமாக உணர்ந்து இறைமயமாதலே சத்விசாரத்தின் நோக்கம் ஆகும். இதனை வள்ளலார் சொந்தப்படிப்பு என்கின்றார். பிறவற்றை சந்தைப் படிப்பு என்றும் சாடுகின்றார். சொந்தப்படிப்பை கல்வி என்றும் கூறலாம்.

தமிழ்மொழியில் "கல்வி எடுத்தல்" என்றால் தோண்டுதல் என்ற பொருள் வரும். நமக்குள்ளாக விளங்கும் இறைவனை தோண்டி எடுத்து விளங்கிக் கொள்ளுதலே உண்மையான கல்வி எனப்படும்.

பரோபகாரம் எனில் பர + உபகாரம், பிறர்க்குச் செய்யும் உதவியே பரோபகாரம் என்றழைக்கப்படுகிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு செய்யும் உதவிகள் பல எனினும் பசியாற்றுவித்தல், அறிவு விளக்கம் செய்தல், அச்சத்தை போக்குதல் போன்றவை முக்கியமாகக் கருதப்படுகின்றன.

சத்விசாரத்தை 25 சதவீதமும், பரோபகாரத்தை 75 சதவீதமும் கடை பிடிக்க வேண்டும் என்பது வள்ளலார் வாக்கு. பரோபகார வரிசையில் முதலில் இடம் பெறுவது அன்னதானம் தான். பசி என்னும் நோய்க்கு பல முறை வள்ளலார் ஆட்பட்டுள்ளார் என்பதை வாழ்க்கைப் பகுதியில் நாம் பார்த்தோம் அல்லவா ? பசி ஆறும் போது ஒருவரின் உள்ளத்தில் ஏற்படும் அமைதி அப்பசியை ஆற்ற உதவிய உள்ளத்திற்கும் பரவுகின்றது. மேலும் தீராத நோய்கள், குழந்தை பேறின்மை, திருமண தடங்கல், வேலையின்மை, மரணபயம், வறுமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர் தங்களால் இயன்றவரை பிறர்க்கு அன்னதானம் செய்வதை ஒரு விரதமாகவே அனு சரித்தார்களானால் அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளிலிருந்து உடனே விடுபடுவார்கள் என்றும் வள்ளலார் மொழிகின்றார்.

சத்விசாரத்தையும், பரோபகாரத்தையும் சன் மார்க்கத்தின் இரு கண்கள் என்று சொல்லலாம். இதற்கும்

மேலாக சன் மார்க்கத்தில் வலியுறுத்தப்படுவது ஆன்ம நேய ஒருமைப்பாடும், ஜீவ காருண்ய ஒழுக்கமும் தான்.

ஆன்ம நேய ஒருமைப்பாடு என்பது உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் ஒரு தன்மையானது என்பதை உணர்ந்து சகோதரத்துவத்துடன் அன்புடனும் பழகும் முறையாகும். வேறுபாடுகள் காணாத இந்த வாழ்க்கை முறையில் சண்டை சச்சரவுகள், சுரண்டல்கள், ஹிம்சைகள் போன்றவை இருக்காது. உண்மையான அமைதியும் அன்பும் ஆனந்தமும் குடி கொண்டிருக்கும்.

ஜீவ காருண்ய ஒழுக்கம் என்பது நம்மைச் சுற்றியுள்ள ஜீவர்களுக்கு அறிவு விளக்கப் பணியும், உடல் விளக்கப் பணியும் செய்து வருதல். மேலும் தனி மனித ஒழுக்கத்தைப் பேணுதலும் ஆகும். இது நான்கு வகைப்படும். அவையாவன.

இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கம்.

1. **இந்திரியவொழுக்கம் :** ஐந்து புலன்கள் கொண்ட (கண், செவி, புலன், நாக்கு, மூக்கு ) மனிதனின் உடல்தான் இந்திரியம் என்பதாம். இந்த எல்லா உறுப்புக்களிலும் தயவு வெளிப்பட இயங்குவதே இந்திரிய ஒழுக்கமாகும். அதாவது தயவோடு எதையும் பார்த்தல், கேட்டல், உணர்தல், உரைத்தல், முகர்தல், வழங்கல் உடலைப் பேணுதல் முதலிய நற்பழக்கங்களை மேற் கொள்ளுதலே இந்திரிய ஒழுக்கம். இவற்றிற்கு மாறான பழக்க வழக்கங்கள் நம்மிடம் அணுகும் போது முயற்சிகள் பல செய்து திருத்திடல் வேண்டும். இத்தயா நன் முயற்சிச் செயல் கூட இந்திரிய ஒழுக்கமே ஆகும்.

2. கரண ஒழுக்கம் : கரணம் என்பது மனம் முதலான தத்துவமாம். இது உள்ளத்திலிருந்து மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என விரிந்து விளங்கும் போது உள்ளிருக்கும் கரணம் விரிந்து செயல்படுவதாகக் கொள்ளப்படும். மனம், வாக்கு, காயம் என அருவாய், அருவுருவாய், உருவாய் புறப்படும் போது புறக்கரணமாகவும் கூறப்படும்.

" இந்த அகக் கரணம் நான்கிலும், புறக்கரணம் மூன்றிலும் தயை நிரம்பச் செய்யும் செயலே கரண ஒழுக்கம் ஆகும். இதற்கு மனத்தின் கண் அருளொளி விளங்கிடச் செய்திடல் வேண்டும். கடவுள் எல்லோர் அகத்தும் ஒளி வடிவாக விளங்குகின்றார். அவர் இருக்கும் இடம் தலை நடுவாகும். இது சிரநடு சிற்றம்பலம் என்று அழைக்கப்படுகின்றது. தயா உணர்வோடு இரண்டு புருவங்களுக்கிடையே உள்ள இடத்தை குறித்து ஆழமாகச் சிந்தித்து அதற்குள்ளே கடவுள் ஜோதி வடிவமாக இருப்பதாக பாவனை செய்ய வேண்டும். இந்த பாவனையை தொடர்ந்து செய்ய செய்ய நாமே அந்த ஜோதி வடிவமாக இருக்கும் உண்மையை உணர்ந்து அதனோடு கூடி ஒன்றுதல் இயலும். அவ்வாறு உள்ளிருக்கும் அந்த ஆன்ம ஒளியை கண்டு அதுவாகி நிற்கப் பழகும் போது புற உலகை விட்டு விடாமல், அந்த ஒளி அனுபவத்தை பெற்றுக்கொண்டே அகத்திலிருந்து அனகமாக வெளிவந்து புற வாழ்க்கையை நடத்த வேண்டும். பிறர் ஏதேனும் தவறுகள் செய்தால், தன்னைத்தான் திருத்திக் கொள்ள வேண்டுமே அல்லாது பிறரை நொந்து கொள்ளாதிருத்தல் முறையாகும்.

இந்த உடலில் உள்ள சிறப்புக்களில் முதன்மையானது மனமாகும். இதுவே பிற விலங்கினங்களிலிருந்து மனிதனை உயர்த்திக் காண்பிக்கின்றது. கடவுள் தன்னுடைய சிறப்பு இயல்புகளை எல்லாம் சுருக்கிக் கொண்டு ஒரு சிறிய அணுவாக மனிதனின் தலைநடுவுள் விளங்கும் நிலையே மனமாக அறியப்படுகின்றது. இது அபக்குவ நிலையாகும். ஆகையால் மனதில் தயாவொளி உண்டானால் கடவுள் உண்மை வெட்ட வெளிச்சமாக வெளிப்படும்.

ஜீவ காருண்ய ஒழுக்கம் மனதிலிருந்து தான் தொடங்க வேண்டியுள்ளது. எனவே முதலில் மனதில் இரக்க உணர்ச்சியை பெருக்கிக்கொண்டு பிறகு அதற்கு வேண்டிய இந்திரிய ஒழுக்கத்தையும் பின் குறிக்கப்படும் ஜீவ, ஆன்ம ஒழுக்கங்களையும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது முறையாகும்.

**3. ஜீவ ஒழுக்கம் :** கரண சுத்தி வந்து உள்ளிருந்து ஒளிரும் போது உடல்பற்று இல்லாமல் போகும். ஆகையால், தன்னின மக்கள் எவரையும் சம ஜீவிகளாக நோக்கும் போது பொது நோக்கம் உண்டாகின்றது.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற பெருநோக்கமே ஜீவ ஒழுக்கமாகும்.

**4. ஆன்ம ஒழுக்கம் :** மனித உயிர்கள் எல்லாம் ஓரினம் என்பதற்கு மேல் மற்றெல்லா உயிர்களும்

ஒவ்வொரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த ஜீவர்களாகவும் காண்கின்றோம். ஆகவே எல்லா ஜீவர்களும் ஒரே தன்மைத்தாகிய ஆன்மாக்களே என்றும் அறியலாகும்.

இந்த எண்ணிலடங்காத அனைத்து ஆன்மாக்களிலும் இருப்பது ஒரே பரமான்மபதி ஆகிய கடவுளாம். இந்த ஒன்றான பரமான்மாவே, தன் அருட்பெருஞ் சித் வசத்தால் ஒவ்வொரு ஜீவான்மாவாகி ஒவ்வொரு உடலை ஏற்றுக் கொண்டு விளங்குகின்றதாகவும் அறியப்படும். இந்த அறிவைப் பெற்று ஒருவன் விளங்கும் தருணம், தான் ஒருவனே, கடவுள் மயமாய்ப் பரமான்மபதி வண்ணமாய் எவ்விடத்தும், எக்காலத்தும், எல்லா ஜீவான்மாக்களிலும் இருந்து கொண்டு அவைகளுக்குத் தேவையான தேகங்களைக் கொண்டு விளங்குவதாகவும் அறிந்து கொள்ளுகின்றான். இந்த உயர் ஆன்ம ஞானம் பெற்றவன் எங்கும் தானாய் இருப்பதை உணர்ந்து, நிறைவு அடைந்து விட்டதாகக் கருதிக் கொண்டு, அதற்கு மேல் எதையும் வேண்டாது வெறுக்காது சலனமற்று உள்ளொடுங்கி மறைந்து போய் விடுகின்றான். அப்படி மறைந்து போனது பிறவாமை நிலை ஆகும். சுத்த சன் மார்க்கத்தில் என்றும் வாழும் மரணமிலா பெருவாழ்வு நிலையான இறவாமையே வேண்டப்படுகின்றது. இறவாமை என்பதனை பின்னர் சற்று விளக்குவோம்.

ஆன்ம இயற்கை 'தயவு' என்பதை நன்கு அறிந்து உளம் கொண்டு அந்த ஜீவ தயவைப் பெருக்கிக் கடவுள் தயவாக ஆக்கிக் கொண்டு தயா பெருஞ்ஜோதி வண்ணமாக என்றும் வாழ்வதுவே இந்த ஆன்ம வொழுக்கம் ஆகும்.

எனவே மேலே குறிக்கப்பட்ட இந்த நான்கு நிலை ஒழுக்கங்களும் சேர்ந்து முழுமையான "ஒழுக்க இயல்" ஆகும் என்பதை தெரிந்து கொண்டு இதன்படி வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரின் தேவையும், உரிமையும், கடமையும் ஆகும் என்று தயவோடு உரைக்கின்றார் சுவாமி சரவணானந்தர்.

## வள்ளலாரின் பேருபதேசம்

ஸ்ரீமுக, வருஷம், ஐப்பசி மாதம், 7ம் நாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்தி வளாகத் திருமாளிகையில் முதல் முறையாக கொடி கட்டிய பின்னர் நிகழ்த்திய உரையின் குறிப்பு.

இங்குள்ள நீங்கள் எல்லோரும் இதுவரைக்கும் இருந்ததுபோல இனியும் வீண்காலம் கழிக்க வேண்டாம். இன்று முதல் நல்ல சிந்தனையில் இருந்து கொண்டிருங்கள். அச்சிந்தனை எதுவென்றால், நாம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது ? நம்மைக் காக்கின்ற

தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது ? என்பனவாம். இதற்கேற்றவாறு நீங்கள் தனியாகவாவது, குழுக்களாகவாவது, உங்கள் அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும் ஒத்தவர்களுடன் கூடி நல்ல சிந்தனையில் இருங்கள். இவ்வாறு செய்தால் நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக் கொண்டிருக்கின்ற பல திரைகளில் அழுத்தமாய் இருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை என்னும் அறியாமைத்திரை நீங்கி விடும். இது நீங்கினால் மற்றத்திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். இத்திரைகள் நீங்க வேண்டுமென தெய்வத்தை எண்ணியும் வேண்டியும், நமது குறையை ஊன்றிச் சிந்தித்தும் எப்போதும் இடைவிடாது ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டும் என்ற முயற்சியுடன் இருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் இது சுத்த சன்மார்க்க காலம். ஆண்டவர் மிக விரைவில் நமக்கு உண்மையைத் தெரிவிக்கப்போகின்றார். அதையும் கூட எளிய முயற்சியின் கண் தரப் போகின்றார். முன்னர் யோகிகள் அடர்ந்த காடுகளுக்குள் சென்று நூறாயிரம் ஆண்டுகள் தவம் செய்து அதனால் பல்வேறு சக்திகளை அடைந்தார்கள். அதனைக் கொண்டு தங்களுடைய அறியாமையை விலக்கிக் கொண்டார்கள். ஆனால் இப்போதோ இறைவனை உள நெகிழ்வோடு நினைக்கின்றதிலும், திரு அருட்பாப் பாடல்களை (ஆறாம் திருமுறை மட்டும்) பொருள் தெரிந்து, இராகம், தாளம்

போன்ற ஆலாபனை ஆடம்பரங்கள் இன்றி உருக்கமாகப் பாடுவதாலும் அந்த யோகிகள் பெற்ற சக்திகளை விட கோடிப் பங்கு பெற முடியும். அறிவு விளக்கம் அடைய முடியும். ஏனெனில் இது சுத்த சன்மார்க்க காலம்.

சிலர் "இது சுத்த சன்மார்க்க காலம் ஆயிற்றே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? காலப்போக்கில் பெற வேண்டியதை நாம் பெற்றுக்கொள்ளப்படாதோ? என்று வினவலாம். ஆம். இது உண்மை தான். சுத்த சன்மார்க்க காலத்தில் அறியாமைத் திரைகள் விலகப்போவதும் உண்மைதான். ஆனால், முன் சொன்ன அறியாமைத்திரை இரண்டு பிரிவாக இருக்கின்றது. யாதெனில் அசுத்தமாயாதிரை, சுத்தமாயாதிரை எனப்படும். இவை கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும் மேற்பாகத்தில் ஒரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்தமாயாதிரை மேற்பாகத்தில் சுத்தமாயாதிரையாக இருக்கும். இவற்றில் அசுத்தமாயாதிரை புற உலக வாழ்க்கைக் குறிக்கோளை உடையது. சுத்தமாயாதிரை அக உலக வாழ்க்கைக் குறிக்கோளை உடையது.

இவற்றில் அசுத்தமாயாதிரை மட்டும் சுத்த சன்மார்க்க காலத்தின் விளைவாக விலகும். எனவே நாம் கூடிய மட்டும் நல்ல சிந்தனையில் இருக்க இயலுமே அல்லாது, பெற வேண்டிய பெரிய நிலையாகிய மரணமிலாப் பெரு வாழ்வாம் இறவாமையை அடைய முடியாது. நன் முயற்சி செய்தே அடைய வேண்டும்.

இந்த நூற்றாண்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரழிவுகள், கூச்சல், குழப்பங்கள், வன்முறைகள் மக்களுக்குப் பக்குவம் வருவிக்கவும், அறியாமையை விலக்கவும் உண்டாயின. ஆதலால் நாம் அனைவரும் இன்று முதலே நல்ல முயற்சியுடனிருந்தால் சுத்த சன்மார்க்க காலத்தின் பயனை அடைதல் கூடும்.

இதுவரை நாம் பார்த்தும் கேட்டும் கவனத்தில் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் கவனத்தை செலுத்த வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி* யன்றி தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தின் உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் வெளிப்படையாகச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனும் தெரிவிக்காமல், பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்; கைலாசபதியென்றும், வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதியென்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனிதனுக்கு அமைப்பது போல அமைத்துவிட்டு, உண்மையாகவே அவ்வாறு இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள். இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இது உண்மையாக இருப்பதாக முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு

உளறியிருக்கிறார்கள். ஆனால் ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இது வரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை.

மேற்சொன்ன கலைகளில் ஓரளவு கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லி இருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்து வருஷம், எட்டு வருஷம் முயற்சி செய்தால், அற்ப சித்திகளையடையலாம். அதற்காக அவற்றில் லட்சியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிற லட்சியம் போய் விடும். அது போய்விட்டால் முக்கிய லட்சியமாகிய இறவாமை கிட்டாது. ஆகையால் அவற்றில் லட்சியம் வைக்காமல் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்திலேயே லட்சியம் வைக்க வேண்டும்.

இதுபோல் வியாகரணம், தொல்காப்பியம், பாணிநீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே அவைகளில் குற்றமே சொல்லி இருக்கின்றார்கள். அருட்ஜோதியே நம் இலக்கணம், இலக்கியம், அவ்வுண்மை அகம் பற்றி, அனகமாக வாழும் நெறி முன்பு வெளியாக வில்லை. புலனெறியில் நித்திய வாழ்வு இல்லை. அதுவே, குறை குற்றம்.

மேலும், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம்

வைக்க வேண்டாம். அவற்றிலும் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக்குறியாகக் குறித்திருக்கிறதேயன்றி வெளிப்படை –யாகச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. இவைகளில் ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. இவைகளுக்கெல்லாம் சான்றாக நானே இருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது இப்போது எப்படி போய்விட்டது. பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்துக் கொண்டிருந்ததற்கு எடுத்துக்காட்டாக நான் சொல்லியிக்கிற திருவருட்பாவில் ஐந்து திருமுறைகளில் உள்ள பாடல்களே போதும். அவைகளையும், மற்றவர்களுடைய பாடல்களையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாட்சி கூறி விடும். ஏன் அத்தனை அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால் அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைக்கு மேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டுவிட்டதனால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்த (சைவ) சமயத்தில் வைத்திருந்த லட்சியம்தான் என்னை இந்த நிலைக்கு தூக்கிவிட்டது

என்று நினைக்க வேண்டாம். அந்த லட்சியம் என்னை தூக்கிவிடவில்லை. என்னை இந்த நிலைக்கு (இறவாமைக்கு) தூக்கிவிட்டது யாதெனில்; தயவு. தயவு என்னும் கருணைதான் என்னை ஏறா நிலைமிசையேற்றி விட்டது.

அந்த தயவுக்கு ஒருமை வர வேண்டும். நம்மால் அறியப்படுகின்ற எல்லாமே அந்த தயவு மயம் ஆன ஒன்றே ஆகும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப் போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படியிருந்தாலும் 1. அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன். 2. மிரட்டிச் சொல்லுவேன். 3. தெண்டன் விழுந்து சொல்லுவேன் ; 4. அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன். 5. அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். அப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன். அதற்காக தண்டித்தல் தயவில்லாச் செயல் கூடாது. நீங்களும் இப்படியே செய்யுங்கள். என்னைச் சுற்றியுள்ள மக்கள் குறித்து மட்டும் அல்லாது உலகமக்கள் அனைவருக்குமாக ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டு இருக்கிறேன். ஏனெனில் அனைவரும் சகோதரர்கள் என்பதாலும், இயற்கையுண்மை வடிவங்கள் என்பதாலும் நான்

அவ்வாறு, ஆன்ம (தயா) நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள் – இதுவரைக்கும் ஒழுக்கத்திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த பழக்க வசத்தினராயிருந்தாலும் பரவாயில்லை. நல்ல பழக்க வழக்கங்களை கடைபிடித்தல் வேண்டும். நீங்கள் நல்லொழுக்கத்திற்கு வருவதுடன் மற்றவர்களையும் எவ்வித தந்திரமேனும் செய்து நல்வழிக்கு அழைத்து வர வேண்டும். முன்பு போல் இப்போது அதிக முயற்சிகள் செய்யத் தேவையில்லை. எளிதில் மரணமில்லாப் பெருவாழ்வு பெற முடியும். ஏனெனில் இது சுத்த சன்மார்க்கக் காலம். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டிவருகிறேன்.

சைவம், வைணவம் முதலிய சமயங்கள் தவிர; வேதாந்தம், சித்தாந்தம் போன்ற மதங்களை வளர்த்த வேதாந்தி, சித்தாந்தி என்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மையை அறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால் நீங்கள் அவை ஒன்றையும் நம்ப வேண்டாம். எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை.

"தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இந்த உலக மக்கள் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள் ஐயோ!

நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினால் தானே என்னைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். (வள்ளல் இராமலிங்க அடிகளாரின் திருவுருவப்படம் என்றும், திருவுருவச் சிலை என்றும் செய்து வைத்துக் கொண்டு அதனையே மூடமாக தெய்வம் போல் வழிபடுபவர்கள் அல்லது வழிபடுவோர் வள்ளல் வருந்திக் கொண்டிருப்பதை நினைவில் கொள்க).

தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ள வில்லை எனில், ஒரு பழத்தை தின்றாலல்லது அதன் ருசி தெரியாது. ருசி தெரியாத பழத்தின் மேல் ஆசை வராது அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தாலல்லது, தெய்வத்தினிடத்தில் ஆசை வராது ஆதலால் தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றே முக்கிய லட்சியத்திலிருந்து கொண்டு நல்ல சிந்தனையில் இருந்து கொண்டிருங்கள்.

அந்த சிந்தனை எப்படிப்பட்டதென்றால் வானில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகள் எப்படிப்பட்டன? இவைகளுடைய தன்மைகள் என்ன? என்பது போன்ற அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தின் கண் புருவம், அக்குள் (கைம்மூலம்) இவைகளிலும் இவை போன்ற மற்ற இடங்களிலும் முடி வளருவது ஏன்? நெற்றி போன்ற பகுதிகளில் முடி ஏன் வளருவதில்லை? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும், அந்நகம் வளர்தலும், இவை போன்ற

பாகங்கள் குறித்தும் நம் உடலை எண்ணி பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருங்கள், இப்படி இடைவிடாது விசாரஞ்செய்து கொண்டிருந்தால்; இவ்வுலக மக்கள் அதைக் குறித்து கேலியாகப் பேசி ஏளனம் செய்வர். அப்படி சொல்வது அவர்களுக்கு இயற்கை. ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை பொருட்படுத்த வேண்டாம்.

இப்பபடியே " காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து கொடுத்தவர் ஆணுக்குக் கடுக்கன், பெண்ணுக்கு மூக்குத்தி தேவை எனில் அதற்குரிய ஓட்டைகளை செய்து அனுப்பி இருக்கமாட்டாரா? என்று சிந்திக்கின்றபோது கடுக்கன், மூக்குத்தி நகை முதலியவைகளை அணிய மனம் வராது. இப்படியே விசாரித்துக் கொண்டிருந்தால் பொன், பொருள் மேல் நாம் வைத்திருக்கும் ஆசைகள் குறையும். அதனால் நிராசை உண்டாகும். நிராசை உண்டானால் ஒருமை வரும். ஒருமையுடன் இருந்தால் தயவு வரும். தயவுடன் இருந்தால் மரணமிலாப் பெருவாழ்வு கிடைக்கும்.

இது தருணம் ஆண்டவர் எல்லாத் தவறுகளையும், அறியாமையையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான, நித்தியமான இன்ப நிலைக்கு ஏற்ற எளிமையான திருவருள் மகாவாக்கியத் திருமந்திரத்தை – தமது உண்மையை வெளிப்படக்காட்டும் மகாமந்திர வாக்கியத்தை – எனக்கு வெளியிட்டவாறு, எனது மெய்யறிவில் அனுபவித்தெழுந்த உண்மை அறிவு அனுபவ ஆனந்த இன்பத்தை நீங்கள்

அனைவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன். குறிப்பிக்கின்றேன், குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே, ஆண்டவர் முதற்சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும் ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம். இது சொற்பொருள். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவானதான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. " சந்ததமும் வேத மொழியாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும் * என்னும் உறுதி மொழியாலும் உணர்க. * தாயுமானவர் – கருணாகரக்கடவுள்

மேலும், இதுவரை தெய்வத்தின் உண்மையைத் தெரியவிடாது அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைந்து விட்டார்கள். சுத்த மாயாகாரியாகிய பெரியோரும் இல்லை. சன் மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால் அனுபவித்து அறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டு

இருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால் இத்தருணம் இக்காலமே சன்மார்க்க காலம். இனி சுத்த சன்மார்க்கம் உலகெலாம் பரந்து விரியும். தயவுடையார் எல்லோரும் சுத்த சன்மார்க்க சங்கத்தவராவர்.

இதற்குச் சான்றாக இப்போதுதான் சன் மார்க்கக் கொடி வடலூர் மேட்டுக்குப்பம் எனப்படும் சித்திவளாகத் திருமாளிகையில் பட்டொளி வீசப் பறக்கவிடப்பட்டுள்ளது. ( 1873, ஸ்ரீ முக ஆண்டு ஐப்பசி மாதம் 7-ம் தேதி புதன்கிழமை காலை 8 மணி ) இக்கொடி உண்மையில் யாதெனில்; நமது நாபி முதல் புருவ மத்தி வரையில் ஒரு நாடி இருக்கின்றது; இந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச்சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக்கொடி நம் அனுபவத்தின் கண் விளங்கும். இந்த அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வண்ணமாக கொடி கட்டியது. இனி அனைவருக்கும் நல்ல அனுபவம் அறிவின் கண் தோன்றும். அருட்பெருஞ்ஜோதியின் உண்மை, தலைநடுவுள், தனிப்பெருங்கருணையோடு தீபச்சுடர் போல் பிரகாசிக்கிறது. அதுவே, ஞானக் கண்ணாடி வழி, மஞ்சளும் வெள்ளையுமாய் புருவ மத்தியில் திரையில் காண்கின்றான் சன்மார்க்கி.

இந்தக் கொடி கட்டப்பட்டு விட்டதால் இனி எல்லோரும் உண்மையை உள்ளபடி அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியாதவாறு மண்ணைப்போட்டு மறைத்துவிட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார். தெரிவிக்கின்றார். நீங்கள் எல்லோரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். நல்ல சிந்தனையுடனும், நல்லொழுக்கத்துடனும் இருந்து கொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவு இருக்க வேண்டும். அந்த தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்க வேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால் ஆண்டவர் எல்லா நன்மைகளையும் அருள்வார் – இது சத்தியம், சத்தியம், சத்தியம். இது ஆண்டவர் கட்டளை.

எல்லோருக்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான மக்களால் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப்பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான மார்க்கம் இந்த சுத்த சன்மார்க்கம் என்னும் தயவு வழி. இது அருட்ஜோதி ஆண்டவரின் திருவுளச் சம்மதம்.

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி
தயவே நிறைக
வாழ்க தயவுடன்
தயவு.

மேற்கூறப்பட்ட பேருபதேசத்தில் வள்ளலார் பெருமானார் சற்றும் தயக்கமின்றி தனக்கு முன்னால் இருக்கும் சமுதாய மற்றும் ஆன்மீக அவலங்களைச் சாடும் போது அவர் ஒரு சுத்த சன்மார்க்க ஞானி என்பதும், ஒரு மக்கள் தலைவர் என்பதும் புலனாகின்றது. தனக்கு கிடைத்த உயரிய ஆன்ம அனுபவங்களை அவர் சராசரி மனிதனுடனும் பகிர்ந்து கொள்வதற்காக உரைநடையிலும், செய்யுள் நடையிலும் கவிதை நடையிலும் ஆறாயிரம் பாடல்களாகத் தொகுத்து வழங்கியவையே இன்றும் “திருஅருட்பா” என ஆறு திருமுறைகளாகக் கிடைக்கின்றது. வாய்ப்பு கிட்டும் போது இப்பாடல்களைப் பொருளுணர்ந்து படித்து பாடலாம். வள்ளலார் தான் கூறவந்ததை மிக எளிய நடையில் எழுதி இருந்தாலும் அதற்குள்ளாக மிக அரிய பெரிய விஷயங்களை அடக்கி, அடுக்கி வைத்துள்ளார். அந்த உண்மைகளை அறிய வேண்டுமெனில் இறை நம்பிக்கை, தொடர்ந்த நன் முயற்சி, உயிர் இரக்கம் முக்கியமாக ஒழுக்கம் தேவை. சுத்த சன் மார்க்கத்தின் உண்மையும் இறைவனுடைய உண்மையும் ஒன்று தான். எனவே இறைவனால் படைக்கப்பட்ட மனிதகுலம் முழுமையும் அவரவர் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு உரிமை உடையவர்களே ஆவர். மேலும் இந்த உண்மை எல்லோருடைய அகத்தும் பொதித்து வைக்கப்பட்டுள்ளது. தனக்குள்ளே திரும்பி பார்க்கும் எவரும் சுத்த சன்மார்க்கம் சொல்லும் உண்மையை

அறியலாம். முன்பு ஓரிடத்தில் குறிப்பிட்ட படி "அனகம்" என்ற சொல்லுக்கும் வேறு சில சன்மார்க்க கலைச் சொற்களுக்கும் தேவையான பொருளை பின்வருமாறு காணலாம்.

**அனகம் :** அகம் என்ற சொல் அனைவரும் அறிந்த ஒன்று. புறம் இதற்கு நேர்மாறான பொருளைத் தருகிறது அன் + அகம் என்பது உள்ளிருந்து வெளியில் வெளிப்படுவது. வெளியில் முழுமையாக வந்து விடாமல் உள்ளிருந்து கொண்டே வெளிப்படுவது. உள்ளேயும் இல்லாமல் வெளியிலும் இல்லாமல் இரு நிலைகளிலும் இயங்கும் நிலை. பழைய சமய, மத கோட்பாடுகளின் படி இறைநிலையை அடைந்தவர்கள் உள்ளே சென்று (ஆன்மாவுக்கு) அடங்கி விடுதல் மரபு. கடவுளை மறந்தவர்கள் பகுத்தறிவு என்ற போர்வையில் வெளியிலே உழன்று கொண்டிருப்பவர் சிலர். சுத்த சன்மார்க்கத்தில் உள்ளிருந்து அனுபவம் அடைந்து கொண்டு அந்த அனுபவம் கெடாது, மாறாது அப்படியே வெளியில் வந்து வாழும் முறையே அனக வாழ்வு என்று குறிக்கப்படும்.

**பிறவாமை மற்றும் இறவாமை :** வள்ளலாருக்கு முன்பு இருந்த ஞானியர் கேட்டுப்பெற்ற நிலை பிறவாமை. பிறவியினால் தான் எல்லா துன்பங்களும் ஏற்படுகின்றன. .எனவே பிறவித் தளையிலிருந்து விடுபட்டு விட்டால்

இன்பம் தேடிவரும் என்று நம்பினர். இதற்கு மேலாக வள்ளலார் தான் கடவுளால் உணர்த்தப்பட்டதாகக் கூறி வேண்டும் நிலை இறவாமை ஆகும். இப்பொழுது பெறப்பட்டிருக்கும் இந்த மனித தேகத்தையே அழியாத பொன்னுடம்பாக, ஒளிவடிவாக மாற்றிக் கொண்டுவிட்டால் என்றும் இறவாத மரணமிலாப் பெருவாழ்வில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கலாம் என்பது வள்ளலாருக்கு தரப்பட்ட மேலான உண்மைப் பொருளாகும். இது முன்னோர் கூற்றுக்கு எதிரானது அல்ல. அவற்றினால் பெறப்பட வேண்டிய முன்னேற்ற நிலை இது ஆகும். மேலும் இதற்கு முன் பிறவாமை குறித்து பேசியதும் இதே வள்ளல் தான் பிற வேறு வடிவங்களில் உலவும் போது என்பதும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டு உரிமை அறிவால் விளங்கிக் கொள்ளுதல் தெளிவாகும்.

தயவு : இது உலகம் கண்டும் கேட்டும் பயன்படுத்தியும் வரும் சாதாரண பொருளைத் தரும் சொல் அன்று. இதனை அதனுடைய சரியான பொருள் வடிவில் உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர் திண்டுக்கல் வாழ் தயவு சத்திய ஞானி சுவாமி தயாநிதி சரவணானந்தர் ஆவார். 'த' என்பது தகராகாசம் எனப்படும் அருள்வெளியைக் குறிக்கின்றது. 'ய' என்பது ஆன்மாவையும் உயர்நிலையையும் குறிக்கின்றது. 'வு'என்பது இறைவனின் பஞ்சபூதத்தையும், ஐவகைச் செயல்களையும் ( ஆக்கல்,

காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். ) உலகத்தையும் குறிக்கின்றது. 'தகரம்' எனும் எங்குமாய் விளங்கும் அருட்சக்தி யகர ஆன்ம உயிர் கொண்டு வுகர உலகத்தில் அனகமாக வாழலாம் என்பது தயவு நெறி உரைக்கும் உண்மை நிலை ஆகும். இது பற்றிய விளக்கங்களை தயவு நூல்களில் காணலாம்.

## "புலால் மறுத்தல்"

'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க' என்ற கொள்கை விளக்கம் கொண்ட மனிதர்களே என்றும் துன்பங்களின்றி அமைதியாக வாழ முடியும். "ஜீவ தேகங்கள் கடவுளது ஆலயங்கள்" என்ற உண்மை புலப்பட்டு விட்டால் எந்த உடலையும் உணவாகக் கருதும் கொடிய பழக்கம் நமக்கு வராது. இறைச்சியை மட்டுமே முக்கிய உணவாகக் கொள்ளும் பல நாட்டினரும் இன்று அதன் தீமை கருதி தவிர்த்து கொண்டு வருதல் கண் கூடு. இந்த சமயத்தில் நல்ல வேளாண்மை திறம் கொண்ட நாம் இறந்த உடல்களை உண்டு நம்முடைய உடலை சுடுகாடாக மாற்றிக் கொண்டிருப்பது நல்லது இல்லை.

***ஜோதி வழிபாடு :*** நாம் அறியாத ஒரு பொருளை தெரிந்து கொள்வதற்காக முன்னமே அறிந்த பொருளை அதனுடன் தொடர்பு படுத்தி இதுபோலத்தான் அது என்று கூறுதல் மரபாகும். தெய்வத்தை இன்னதென்று எவரும் அறியாததால் தான் பலப்பல உருவங்களை ஆக்கிக்

கொடுத்து மக்களை ஒன்று பட விடாமல் செய்து விட்டனர் சமய மத வாதிகள். வள்ளற்பெருமானார் இதற்கு தீர்வாக என்றுமே மாறாத உண்மையை உடைய நித்திய கடவுளை விளக்க, ஓரளவு நித்தியத்தன்மை உடைய புறப் பொருளாகிய ஜோதியை அடையாளமாகக் கொள்கிறார். ஜோதி, உருவத்திற்கும் அருவத்திற்கும் இடைப்பட்ட ஒரு தூய்மையான வடிவமாகும். அக இருளை நீக்குவதற்கென்றே ஜோதி வழிபாடு வள்ளலாரால் போற்றப்பட்டது. இது எந்த மதத்தினருக்கும் ஏற்றதாகும்.

## வள்ளலாரின் திருவாக்கு

"நான் இந்த உடம்பில் (இறவா உடலில்) இருக்கிறேன். இனி, எல்லா உடல்களிலும் புகுந்து கொள்வேன்" என்று 1874 ஜனவரியிலும் அதற்கு சற்று முன்பும் வாக்குறுதி அளித்தார். இதை நிறைவேற்றி வைப்பதற்குத் துணையாக அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அவர் இருக்கும் இடத்தில் (வடலூரில்) நிரந்தரமாக வந்து தங்குவதாகவும், வந்து தங்கி அமர்ந்து வீற்றிருக்கும் போது ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே ஆண்டவர், "எனது பேர் உடம்பில் கலந்து உளத்தே பிரியாமல் இருப்பார்" – அதாவது, வள்ளலாரின் இறவா முத்தேகமாகிய பேருடம்பில் (சுத்த, பிரணவ

தேகங்களிலும் மற்றும் வியாபகமான ஞான தேகத்திலும்) ஒன்றாகக் கலந்து கொள்வார் என்றும், அப்போது என்ன அதிசயம் நடக்கப்போகிறது என்பதை அந்த ஒரு மணி நேரம் சென்றபின் நீங்கள் அறிவீர்கள் என அவர் முன் கூட்டியே முன் எச்சரிக்கையாக சீடர்களுக்குத் தனது கடைசிப் பாட்டில் தெரிவிக்கிறார். மேலும் சீடர்களிடம் நேரில் இதை விளக்கித் தெரிவித்திருப்பதாவது : தான் யார் கண்ணுக்கும் தோன்றாமல், யாரும் பார்க்க முடியாதபடி தன்னுடல் யாருக்கும் தோன்றாமல் போகும் என்றும், ஆனால் எல்லா உடல்களிலும் புகுந்து கொள்வேன் என்றும், இவ்வுலகத்திலும் மற்றெங்கும் இருப்பேன் என்றும், பின்னர், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருவார் (அதாவது உலகில் வெளிப்பட்டு விளங்கும்படி வருவார்) என்றும் அவ்வாறு வந்தவுடன் தான் மறுபடியும் முத்தேக சித்தியுடன் கூடிய இறவா உடலில் இவ்வுருவிலேயே வந்து சித்திகள் பல செய்வதாகவும் தெரிவித்தார். மேலும், திருவருட் செங்கோலாட்சி (அருளரசாட்சி) செய்வேன் என்றும் அக இனத்தாராகிய மகான்களுக்கு சாகாவரமும் ஏனையோர்க்கு பரிபக்குவம் வரும்படி பரிபாக நிலையையும் தானே அளித்து அருளுவதாகவும் தெரிவித்தார். இவ்வாக்குறுதிகளை வள்ளலாரின் நேர்

சீடரான காரணப்பட்டு கந்தசாமி பிள்ளையின் திருவருட்பா 1924ன் பதிப்பிலும் ப63ல், இராமலிங்கசாமி மடாலயம் திருவொற்றியூர் 1964ன் பதிப்பிலும் ( முதல் பகுதியில் ப84ல், இரண்டாம் பகுதியில் ப 677 ;) பாலகிருஷ்ணபிள்ளையின் திருமுகப்பதிப்பிலும் (வள்ளலாரின் கடிதங்கள்) (ப 100 –111) உள்ளவாறு கண்டு கொள்க. வள்ளலாரின் இவ்வாக்குகள் ஆழமான பொருளைக் கொண்டு, ஒவ்வொன்றும் காரணகாரிய சங்கிலித் தொடர்பான சம்பந்தம் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக நிகழக்கூடியவை. ஆனால் இவை எல்லாம், வள்ளலார் 30–1–1874ல் கடைசியாக வெளியிட்ட சபை விளம்பரம் எனும் பொது அறிக்கைக்குப் பின்பு தான் நிகழ்ந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

முடிவில் வள்ளலார் பொது மக்களுக்கு 30–1–1874ல் கடைசியாக வெளியிட்ட சபை விளம்பரம் எனும் அறிக்கையின்படி, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உலகில் தான் இருக்கும் இடத்தில் (வடலூரில்) அன்று முதலாக வெளிப்பட்டு விட்டார் என்றும், அவர் நிரந்தரமாக அமர்ந்து வீற்றிருக்கின்றார் என்றும் அற்புத சித்திகள் எல்லாம் செய்வார் என்றும் தெரிவித்தார். "இனி இச் சீவர்கள், (மனித குலம் பூராவும் பரிணாமக் கிரமப்படி படிப்படியாக மேலும் மேலும் மேன்மையுற்று உய்து விளங்கி

உயிர், உணர்வு, உள்ளம், உடல் இவை எல்லாம் வளர்ச்சியிலும் அறிவு பூர்வமான உணர்விலும், ஆற்றலிலும் ஆக்கத்திலும் உண்மை அறிவு (சத்திய ஞான அறிவு), உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய குணங்களைப் பெற்று நற்செய்கையுடையவராய், வாழும் பொருட்டும், எல்லா சமய, மத மார்க்கங்களுக்கு பொது நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தை, சுகமுடன் களிப்பும் வெளிப்படத் தழுவுவதற்கும், பிணி மூப்பு ஆகியவற்றில் விரைந்து விரைந்து இறந்து சீவர்கள் உயரிய வாழ்வும் ஆன்மீக உணர்வும் அடையாமல் வீண் போவதைத் தடுக்கவும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் இங்கே ஓர் ஞானசபையைத் தோற்றுவித்தும் தாமே இங்கே வெளிப்பட்டு, அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் இங்கே அமர்ந்து அற்புத சித்திகள் எலாம் செய்யும் திருவுளக் குறிப்பையும் வெளிப்படுத்தி " அருட் பெருஞ்ஜோதியராய் வீற்றிருக்கின்றார்". மூப்பினர் இளமையைப் பெற்று நிற்றலும், (ஏக தேசமாக) இறந்தவர் உயிர் பெற்று எழுதலும் முதலிய அற்புத சித்திகள் இங்கு நடப்பதைக் காணலாம்".

வள்ளலார் ஏற்கனவே மேற்சொல்லிய வாக்குகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வைக்கும் தருணம் ஆண்டவர் வருகையால் வந்து விட்டதை அறிந்து கீழ்காணும் செயல்களை ஒவ்வொன்றாகச் செய்யலானார்.

அ) அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் வருகையைத் தெரிவித்து தை மாதம் புனர் பூசம் நாளில், 30–1–1874 ல் சபை விளம்பரம் எனும் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டது.

ஆ) வள்ளலார் சித்திவளாக மாளிகையில் சீடர்களிடம் விடை பெற்று தனி அறையில் 30–1–1874 நள்ளிரவு முதலாக தனிமையாக இருந்து கொண்டது. "கடையை விரித்தோம் (தலை வாசலை, கதவை இவ்வளவு காலம் திறந்து வைத்திருந்தோம்) கொள்வாரில்லை (என் கொள்கைகளை ஏற்று அதன்படி நடக்கவில்லை) கட்டி விட்டோம் (தலைவாசலை மூடிவிட்டோம், தனிமையில் நான் இருப்பேன்) ஆனாலும் உங்களை இனி கட்டாயப்படுத்தி திருத்துவதற்கு உங்களை அச்சில் வார்ப்போம். ஆகாவிடில் மிடாவில் வார்ப்போம் (அரிசிப் பானையில் வேக வைப்பது போல் பரி சுத்தமடையும் படி பக்குவப்படுத்துவோம்), திருத்திவிடுவோம். அஞ்ச வேண்டாம்" என அடுக்குத் தமிழில் சொல்லி சீடர்களுக்கு ஆறுதல் அளித்தார். இப்போது இவ்வுடம்பில் இருக்கின்றோம். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வோம் என சொல்லித் தைரியப்படுத்தினார்.

இ) அப்போது, தெய்வீகத்தரமாக மாற்றப் பட்டிருக்கும் தன் இறவா உடலை யார் கண்ணுக்கும்

காணாதபடி தோன்றாமல் செய்து, வெறும் வீடாகத் தான் இருக்கும் படி ஆண்டவர் செய்ததால், வள்ளலார் அதே சமயம் (தைப்பூசம் நாளில்) உலகில் எல்லோரது உடம்பிலும் புகுந்ததுமன்றி இவ்வுலகத்திலும் மற்றெங்கும் இருந்து கொண்டது.

ஈ) தன் அறையில் தனிமையாகப் புகுந்தபின் அவர் அறிவித்தபடி அவர் செய்த சித்திகளுள் முக்கியமானது, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு அர்ப்பணித்து தியாகம் செய்து தன் உடலைக் காணாதபடி கரைத்துக் கொண்டு அதே சமயம் ( சில மணி நேரத்திற்குள்ளாக) ஆண்டவர் முன்னிலையில் எல்லா உடல்களிலும் புகுந்து கொண்டதாகும். வெளிப்படையாக எல்லா உடல்களின் வெளிச்சூழலில் தன் உடலின் அருட்சக்தியை ஒவ்வொருவரும் உணரும்படியாகப் புகுந்துகொண்டும், தன் இறவா உடலைக் காணாதபடி கரைத்துக் கொண்டபோது, அதன் விளைவாக வெளிப்பட்ட நுண்ணிய உடல் தாதுப்பொருள்களின் வெண் அணுத்துகள்கள் உலகெங்கும் பரவி அவைகளைக் கொண்டு எல்லாரது உள் உடம்பினுக்குள் மறைவாகப் புகுந்து கொண்டதுமாகும். இதனால் எல்லா உடம்புகளும் தன் உடம்பே என்னும் படி சொந்தமாக்கிக் கொண்டார். ஏற்கனவே வள்ளலார். "எல்லா உலகும் தன் வசமாயின, எல்லா உயிர்களும் தன் உயிர் ஆயின" என அருட்பாவின்

இறுதியில் பாடியிருப்பது கவனிக்கத் தக்கது. அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் முன்னிலையில் வள்ளலார் தான் அடைந்துள்ள அருட்பெருஞ் ஜோதியையும் அதன் அருட்சக்தியையும் உலகம் பூராவும் பரப்பினார் என்றால் அது மிகையாகாது.

"உலகில் அருட்பெருஞ்ஜோதியும்
வள்ளலாரின் இறவா முத்தேக அருளாட்சியும்"
– பக் 142.


அகத்தே கறுத்துப்புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்தி சன்மார்க்கம் அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே.
"உற்றது உரைத்தல்"- வள்ளலார்

ஒளிமய, தூக்கமற்ற, நிழலற்ற, சுகமய இறவா உடலை வள்ளலார் அடைந்த பின், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உலகில் வருவதால், நேரில் வந்து தங்கி அருள் செய்வது நிச்சயம் என அறிந்து கொண்டபின், வள்ளலார் சீடர்களுக்கும் பக்திமான்களுக்கும் தன் சுத்த சன்மார்க்க கொள்கையாக, ஆண்டவரை அடைய சச்சிதானந்தப் பொருளுடன் ஒன்று பட்டு கருணையுடனிருந்து வாழ்வில்

கருணை புரிந்து இறவா உடலை அடைவதே வாழ்வின் முடிவான இலட்சியம் என்று விளக்கமாகவும் வெளிப்படையாகவும் கூறலானார். இந்த உயரிய இலட்சியம் சீடர்களுக்கும் மக்களுக்கும் நடைமுறையில் சாத்தியமாவதற்கு 1873 அக்டோபரில் நடந்த சீடர்கள் கூட்டத்தில், ஆண்டவர் அப்போது நேரில் தனக்கு அளித்த மகா மந்திரத்தை

" அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

எனும் மந்திரத்தை உடனே எல்லா மக்களுக்கும் பொது மந்திரமாக கூட்டாகவே வழங்கினார்.



## வள்ளற் பெருமானார் வரலாற்றுக் குறிப்புகள் :

| | |
|---|---|
| இயற்பெயர் | : இராமலிங்கம் |
| சிறப்புப்பெயர் | : திருஅருட்பிரகாச வள்ளலார் |
| அவதாரம் | : 5–10–1823 சுபானு புரட்டாசி 21 சித்திரை நட்சத்திரம், ஞாயிறு |
| ஊர் | : மருதூர், கடலூர் மாவட்டம் |
| பெற்றோர் | : இராமையா – சின்னம்மையார் |
| உடன் பிறந்தோர் | : சபாபதி, பரசுராமர், சுந்தராம்பாள், உண்ணாமுலையம்மாள் |
| வாழ்ந்த இடங்கள் | : சென்னை 1825–1858 |
| | கருங்குழி 1858–1867 |
| | வடலூர் 1867–1870 |
| | மேட்டுக்குப்பம் 1870 ....... |
| வெளியிட்ட நூல்கள் | : ஒழிவில் ஒடுக்கம் (1851) |
| | தொண்டமண்டல சதகம் (1885) |
| | சின்மய தீபிகை (1857) |
| இயற்றிய நூல்கள் | : மனுமுறைகண்ட வாசகம் |
| | ஜீவகாருண்ய ஒழுக்கம் |
| அருளிய பாடல்கள் | : திருஅருட்பா (ஆறு திருமுறைகள்) |
| நிறுவிய நிலையங்கள் | : சுத்த சமரசசன்மார்க்க சங்கம் (1865) |
| | சத்திய தருமச்சாலை (1867) |
| | சத்திய ஞான சபை (1872) |
| | சித்திவளாகம் (1870) |
| அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரானது | : 30–1–1874, ஸ்ரீமுக, தை 19, வெள்ளிக்கிழமை. |

திருஅருட்பா

## ஜோதீ ஆராதனை

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி.

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே.
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி

திருச்சிற்றம்பலம்

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புருவாம் பரசிவமே !

— திருச்சிற்றம்பலம்.

## ஆராதனைப் பாடல்

அருட்ஜோதி தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் சங்கற்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி
அற்புதக் கடவுளே ! இது தொடங்கி

எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்

எல்லாமாகிய தனிப்பெரும் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் பெருங்கருணைக்கு வந்தனம் ! வந்தனம் !

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி
திருவருட்பிரகாச வள்ளலார்
திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !
சற்குரு நாத சுவாமிகள்
திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்

திருந்த உலகர் அனைவரையும்

சகத்தே திருத்திச் சன்மார்க்க

சங்கத் தடைவித் திடஅவரும்

இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்

திடுதற் கென்றே என்னை இந்த

உகத்தே இறைவன் வருவிக்க

உற்றேன் அருளைப் பெற்றேன்.

---

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்

வாடினேன் ;

வீடு தோறிரந்தும்

பசியறாதயர்ந்த வெற்றரைக் கண்டுளம்

பதைத்தேன் ;

நீடிய பிணியால்

வருந்துகின்றோர் என்நேர் உறக்கண்டுளம்

துடித்தேன் ;

ஈடில் மானிகளாய்

ஏழைகளாய் நெஞ்சு

இளைத்தவர்

தமைக்கண்டு இளைத்தேன்.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண்டுவனே.

---


காற்றாலே புவியாலே ககனமதனாலே
கனலாலே புனலாலே கதிராதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே
கோளாலே பிறஇயற்றுங் கொடுஞ்செயல்களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டும் என்றேன் விரைந்தளித்தான்
எனக்கே
ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்
எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே.

---

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளும்களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுத்த மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலம்கொடுத்த நலமே
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான்வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத்துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

" நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண்
ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந் தருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்து வனைந் தேத்தும்நாம்
வம்மின் உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில்
புகுந்தருணம் இதுவே"



வடலூர் சத்திய ஞானசபையில்
தைப்பூச ஜோதி தரிசனம்

# அருட்ஜோதி வள்ளலார்
# சுத்த சமரச சன்மார்க்க சங்கம்

**T.R. ஜவஹர்லால்**
தலைவர்
Ph : 2332362
Cell : 98948-48391

**தி. செங்காயிரம்**
துணைத்தலைவர்
54, சிலோன் காலனி,
பனையூர் (P.O), மதுரை – 9.

**P.R. சுப்பிரமணியன்**
செயலாளர்
Ph : 2344510
Cell : 98421-44510.

**த. மாணிக்கம்**
துணைச்செயலாளர்
Ph : 5531727

**பி.ச. தருமலிங்கம்**
பொருளாளர்
Ph : 99421-41254

விலை : ரூ. 10.00

ராணி கிராபிக்ஸ், 42-A, மகால் 2வது தெரு, மதுரை–1. Cell : 98650 57999